# சிம் பல்கலைக்கழகம் பெயர் மாற்றம்

சிங்கப்பூரின் ஆறாவது தன்னாட்சிப் பல்கலைக்கழகமான சிம் பல்கலைக்கழகம் பெயர் மாற்றம் காண்கிறது. இன்று முதல் அது சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம் என்று அழைக்கப்படும்.

புதிய பெயர் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட துறைகளில் வாழ்நாள் கற்றலைப் பல்கலைக்கழகம் இலக்காகக் கொண்டிருப்பதைப் பறைசாற்றுகிறது.

“பிரோயகக் கல்வி, பெரியவர்களுக்கான கல்வி ஆகியவற்றை பாரம்பரியமாகக் கொண்டிருப்பதே இந்தப் பல்கலைக்கழகத்தின் தனிச்சிறப்பு. இந்தப் பாரம்பரியம் பாதுகாக்கப்பட்டு வலு சேர்க்கப்படும்,” என்று கல்வி அமைச்சர் (உயர்கல்வி, திறன்கள்) ஓங் யி காங் தெரிவித்தார்.

சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகத்துக்கு இரண்டு முக்கிய அம்சங்கள் இருக்கும். சமூக அறிவியலிலும் மனித, சமூக மேம்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் துறைகளில் கவனம் செலுத்துவது அவற்றில் ஒன்று. வாழ்நாள் கற்றலில் கவனம் செலுத்தி ‘ஸ்கில்ஸ்ஃபியூச்சர்’ திட்டத்தில் பங்கெடுப்பது மற்றோர் அம்சமாகும்.